**O.S.179/2020**

Date : 26.03.2024

வா.சா.3 : ஆனந்த ராஜன்

வா.சா. 3 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்

வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை ஏதும் வரவில்லை என்றால் சரிதான். என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தது ஜோசப் தங்கையா என்றால் என்னை அழைத்து வரவில்லை. என்னிடம் சாட்சியம் அளிக்க தகவல் கூறினார். ஜோசப் தங்கையா சாட்சியம் அளிக்க வேண்டும் என்று தட்டச்சு செய்து அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் அவரது வழக்கறிஞர் கொடுத்தார் அதில் நான் கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்களும் எனக்கு தெரியும். ஏற்கெனவே தயார் செய்து வைத்திருந்த வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் வைத்து படித்து பார்த்து கையெழுத்து போட்டேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நான் விமான படைப்பிரிவில் வேலை பார்த்தேன் என்றால் சரிதான். 1978 ல் இருந்து பிப்பரவரி 1993 வரை வேலை பார்த்தேன். அதன் பின்பு நான் அரசியலில் இருந்தேன். அரசியலை தவிர வேறு எந்த வேலையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். CMS நடுநிலைப்பள்ளியின் தாளாளர் என்பதற்கு நான் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சௌந்தர பாண்டியன் என்பவர் மருதகுளம் சர்ச்சில் ரெவரெண்டராகவும் கூடுதலாக மருதகுளம் உயர் நிலைப்பள்ளில் தலைமை ஆசிரியராக வேலை பார்த்தார். அவர் நல்லாசிரியர் விருது வாங்கினார். அதற்கான ஆவணத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். அவர் ஆழ்வாநேரி பகுதியில் எந்த காலத்திலும் வேலை பார்க்கவில்லை என்றால் ஆழ்வா நேரி சர்ச்சில் ரெவரெண்டராக இருந்தார் பள்ளியில் வேலை பார்க்கவில்லை. 1993 ம் ஆண்டு வாக்கில் CMS பள்ளியில் யார் தலைமையாசிரியராக இருந்தார் யார் ரெவரெண்டராக இருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் ரெவரெண்டராக சௌந்தர பாண்டியன் இருந்தார். பள்ளியில் யார் வேலை பார்த்தார் என்று தெரியாது. நான் கூறுவது போல் சௌந்தர பாண்டியன் ரெவரெண்டராக இருந்ததற்கு நான் எந்ந ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியும். வழக்கில் எந்த சொத்து காண்பிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியும். சர்வே

எண்.216/132A ஆகும். அதன் நான்கு மால் எல்கை எனக்கு தெரியாது. ஆனால் பள்ளிக்கு மேல் பகுதியாகும். கண்ணையா என்பவரை நான் நேரில் பார்த்ததில்லை என்றால் சரிதான். அவர் எங்கு குடியிருந்து வந்தார் எங்கு வைத்து இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது வாக்குமூலத்தில் சௌந்தர பாண்டியனை முழு தகுதி வாய்ந்த நபராக தேர்ந்தெடுத்தார் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் நல்லாசிரியர் விருது பெற்று இருந்ததால் அவருக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்ததை நான் கேள்விபட்டேன். அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தை நான் 2009 ல் பார்த்துள்ளேன். அது எத்தனை பக்கங்கள் இருந்தது, அது எத்தனை ரூபாய் பத்திரத்தில் எழுதப்பட்டிருந்து என்றும், அது கையால் எழுதப்பட்டிருந்ததா அல்லது தட்டச்சு செய்யப்பட்டிருந்ததா என்றால் எனக்கு நியாபகம் இல்லை. ஆனால் தட்டச்சு செய்த நியாபகம் உள்ளது. அந்த ஆவணத்தை நான் ஆழ்வாநேரி CMS பள்ளியின் ஆவண கோப்பில் பார்த்தேன். நான் அப்போது பள்ளியின் தாளாளராக இருந்தேன். பள்ளியின் கோப்புகளை தனிப்பட்ட நபர் யாரும் வெளியில் எடுத்து செல்லமாட்டார்கள் என்றால் தலைமையாசிரியரின் கட்டுப்பாட்டில் உள்ளதால் அவர் எடுத்து செல்வார். நான் கூறுகின்ற செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்பட்டது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆவணங்களை பார்த்துள்ளேன். என் வாக்குமூலத்தில் செட்டில்மெண்ட் விவரம் ஊரில் உள்ள அனைவருக்கும் தெரியும் என்று நான் சொல்லியிருப்பதில் அனைவரும் என்று யாரை சொன்னேன் என்றால் தலைமையாசிரியர் ஜோசப் தங்கையா, ஜூலியட் என்ற டீச்சர், எலிசா என்ற அந்த ஊர் சாரும் , அகஸ்டின் என்ற சாரும் மற்றும் ஒரு சில நபர்கள் ஆகும். அவர்கள் பெயர்கள் எனக்கு நியாபகம் இல்லை. நான் சொல்கிற நபர்கள் அனைவரும் இந்த ஆவணத்தை ஏற்படுத்தியதாக சொல்லும் காலத்தில் இருந்தார்களா என்றால் அது எனக்கு தெரியாது. CMS இவான்கலிக்கல் சர்ச் சங்கத்தில் நான் ஒரு உறுப்பினர் என்றால் சரிதான். இந்த சர்ச்சின் கீழ்தான் ஆழ்வாநேரி CMS நடுநிலைப்பள்ளி கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சரிதான். CMS இவான்கலிக்கல் சர்ச் சங்கம் 1925 லேயே பதிவு செய்யப்பட்ட சங்கம் என்றால் 1924 - 1925 ல் பதிவு செய்யப்பட்டது. அதனுடைய தற்போதைய பதிவு எண்.4/1982 ஆகும். சேரன் மகாதேவி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. CMS இவான்கலிக்கல் சர்ச் சங்கத்தின் பைலாவை நான் படித்து பார்த்துள்ளேன். இந்த இவான்கலிக்கல் சர்ச் சங்கத்தின் கீழ் இயங்கக்கூடிய பள்ளிகள் மற்றும் சர்ச்சின் சார்பில் சொத்துக்கள் வாங்குவதாக இருந்தாலும் பரிவர்த்தனை செய்வதாக இருந்தாலும் பொது குழு

உறுப்பினர்களின் தீர்மானத்தின் அடிப்படையில்தான் பெற முடியும் என்றால் சரிதான். அந்த தீர்மானத்தின் மூலமாக பள்ளிக்காக ஒரு சொத்து வாங்குவதாக இருந்தால் அந்த சங்கத்தின் தலைவர் செயலாளர் மூலமாகத்தான் பெற முடியும் என்றால் புதிய சொத்தை வாங்குவதாக இருந்தால் பொது குழு தீர்மானத்தின் அடிப்படையில் வாங்குவார்கள். நன்கொடையாக ஒருவர் கொடுத்தாலும் பொது குழு தீர்மானத்தின் அடிப்படையில்தான் கொடுக்கவேண்டும் என்றால் தவறு. இந்த வழக்கு சொத்தை கொடுப்பதற்கு முன்பு பொது குழு தீர்மானத்தில் பேசப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் பள்ளிக்கு தானமாக கொடுக்கப்பட்டது என்று தகவல் தெரிவிக்கப்பட்டது. பள்ளிக்கு தானமாக கொடுக்கக்கூடிய சொத்துக்களின் ஆவணங்கள் CMS இவான்கலிக்கல் சர்ச் சங்கத்தின் அலுவலக கோப்பில்தான் இருக்கும் என்றால் சரியல்ல. பள்ளிக்கு கொடுக்கக்கூடிய சொத்துக்களின் ஆவணங்கள் யார் வசம் இருக்கும் என்றால் பள்ளி தலைமை ஆசிரியர் அலுவலகத்தில் இருக்கும். பள்ளிக்கு என்னென்ன சொத்துக்கள் இருக்கும் என்ற விவரங்கள் பள்ளியின் ஆவணங்களில் இருக்குமா என்றால் இருக்கும். இந்த விவரங்கள் எல்லாமே CMS இவான்கலிக்கல் சர்ச் சங்கங்கத்தில் கோப்புகள் வாயிலாக எழுத்துப்பூர்வமாக இருக்கும் என்றால் இருக்காது. ஆழ்வாநேரி CMS நடுநிலைப் பள்ளியில் ஜோசப் தங்கையா வேலை பார்க்கவில்லை என்றால் தலைமை ஆசிரியராக வேலை பார்த்தார். எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் என்று நியாபகம் இல்லை. நான் தாளாளராக 2009 ல் பொறுப்பில் இருக்கும் போது தலைமை ஆசிரியராக இருந்தார். அவர் சுமார் 3 வருடங்களுக்கு முன்பு பணி ஓய்வு பெற்று விட்டார். பள்ளியின் ஆவணங்களை பணியில் இல்லாதவர்கள் வெளியில் எடுத்து வர முடியாது என்றால் சரிதான். பள்ளிக்காக வாங்க கூடிய சொத்துக்களை ஒரு தனிப்பட்ட நபர் தனக்கு பாத்தியம் என்று உரிமை கோர முடியாது என்றால் வாங்கப்பட்டிருந்தார் உரிமை கோர முடியாது. இந்த வழக்கிலிலும் பள்ளி நலனுக்காக வாங்கப்பட்ட சொத்து என்றுதான் சாட்சியம் அளிக்க என்னை அழைத்து வந்தார்கள் என்றால் சரிதான். பள்ளி நலனுக்காக வாங்கப்பட்ட சொத்தில் ஒரு தாவா ஏற்பட்டால் அது சம்மந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்க அந்த சமயத்தில் பணிபுரியும் பள்ளியின் தலைமை ஆசிரியர் அல்லது சர்ச் சங்கம்தான் நடவடிக்கை எடுக்க முடியும் என்றால் சரிதான். யார் மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றி அவர் மூலம்தான் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்றால் சரியல்ல. எதன்

அடிப்படையில் சரியல்ல என்று நான் கூறுகிறேன் என்றால் தலைமை ஆசிரியர் கவனித்து கொள்வார். நான் தலைமை ஆசிரியர் என்று கூறுவதில் நடவடிக்கை எடுத்த பின்பு அவர் ஓய்வு பெறுவார் என்றால் வேறு தலைமை ஆசிரியர் வழக்கை தொடருவார் என்றால் சரியல்ல. முதலில் உள்ளவரே வழக்கை தொடரலாம். பள்ளியில் ஓய்வு பெற்ற பின்பு தலைமையாசிரியருக்கு அதன் நிர்வாகத்தில் தலைமையிட உரிமை இல்லை என்றால் உண்டு. வழக்கிற்கு மட்டும் பழைய தலைமை ஆசிரியருக்கு உரிமை உண்டு. CMS இவான்கலிக்கல் சர்ச் சங்கத்தின் சத்திய சாமுவேல் மற்றும் ஜோசப் தங்கையா ஆகியோர்களின் கீழ் ஒரு குழு உள்ளது என்றால் குழு அல்ல நிர்வாகிகள் ஆவார்கள். அதே போல் சாமுவேல் ராஜ், தாமஸ் வாக்கர் என்பவர்களின் கீழ் ஒரு குரூப் உள்ளனர் என்றால் இல்லை. சத்திய சாமுவேல் மற்றும் ஜோசப் தங்கையாவின் கீழ் CMS இவான்கலிக்கல் சர்ச் சங்கத்தால் ஒரு தேர்தல் நடத்தப்பட்டது என்றால் நடத்தப்பட்டது. சாமுவேல் ராஜ், தாமஸ் வாக்கர் என்பவர்களின் கீழ் ஒரு தேர்தல் நடத்தப்பட்டது என்றால் இல்லை. இதே சங்கத்திற்கு சாம் ரசல் என்பவரின் தலைமையில் ஒரு தேர்தல் நடத்தப்பட்டது என்றால் சரியல்ல. சத்திய சாமுவேல் , சாமுவேல் ராஜ், சாம் ரசல் என்பவர்கள் நடத்திய தேர்தலின் அடிப்படையில் உறுதி செய்வதற்கு சேரன் மகாதேவி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் கோப்புகள் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சத்திய சாமுவேல் மட்டும்தான் தாக்கல் செய்தார். மேற்கண்ட மூன்று நபர்களும் தாக்கல் செய்த கோப்புகளை சேரன்மகாதேவி மாவட்ட பதிவாளர் ஏற்க முடியாது என்று 21.06.2023 ல் ஒரு உத்தரவு பிறப்பித்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சத்திய சாமுவேல் தாக்கல் செய்த கோப்பில் என்னை தாளாளராக நியமித்து இருந்தார் என்றால் சரிதான். சாமுவேல் ராஜ் என்பவரின் கீழ் இயங்கும் குரூப்பில் 3 ம் பிரதிவாதி பட்டு ராஜா ஒரு உறுப்பினராக உள்ளார் என்றால் பட்டு ராஜா யார் என்று எனக்கு தெரியாது. சேரன் மகாதேவி மாவட்ட பதிவாளர் பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக மதுரை உயர் நீதிமன்றத்தில் நீதி பேராணை எண்.30601/2023 தாக்கல் செய்திருந்தார் என்றால் கேள்விப்பட்டேன். இந்த நீதி பேராணை மனுவில் சாமுவேல் ராஜ் குரூப் தங்களையும் தரப்பினராக சேர்க்கவேண்டும் என்று மனு செய்து நிலுவையில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை நான் பார்த்துள்ளேன். அதை சுற்றி வேலி போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வேலி பட்டு ராஜா போட்டுள்ளார் என்றால் சரியல்ல. பள்ளி சார்பில் போடப்பட்டுள்ளது. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு கண்ணையா என்பவர்

சௌந்தரபாண்டிக்கு எந்த விதமான செட்டில் மெண்ட் ஆவணமும் எழுதி கொடுக்க வில்லை என்றால் சரியல்ல. நான் ஜோசப் தங்கையாவுக்கு எதிரான குரூப்பில் உள்ள பட்டு ராஜாவுக்கு எதிராக பகைமை அடிப்படையில் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றாலும் முதல் விசாரணை வாக்குமூலம் சட்டப்படி ஏற்புடையதல்ல என்றாலும் சரியல்ல.